## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.65/2018

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மணி | மதம் | : இந்து |
| த/பெ | : கணேச ரெட்டி | ஜாதி | : -- |
| வயது | : 65 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : கூலி | வட்டம் | : திருத்தணி |

16.10.2025

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

8. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் இடத்தின் பக்கத்தில் கொட்டகை போட்டுள்ளார்கள். எனவே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தை நான் யாரிடமிருந்து வாங்கினேன் என்றால் தேசம்மாளிடம் இருந்து வாங்கினேன். வழக்கு சொத்து பட்டா இடமா, கிராம நத்த இடமா என்றால் கிராம நத்தம் ஆகும். தனம்மாளுக்கு கிராம நத்த பட்டா எப்போது கொடுத்தார்கள் என்றால் 2010க்குள் கொடுத்திருப்பார்கள். தனம்மாளுக்கு வாரிசுகள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். தனம்மாள் உயிருடன் இருக்கும்போதே எனக்கு எழுதி கொடுத்துவிட்டாரா என்றால் ஆமாம். அவ்வாறு தனம்மாள் எனக்கு எழுதி கொடுத்ததாக சொல்லும் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அவ்வாறு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

9. தனம்மாளுக்கு எந்த வாரிசும் இல்லை என்றால் தனம்மாளுக்கு 3 பெண் குழந்தைகள் உள்ளார்கள். லலிதா, கௌரி, லட்சுமி ஆவார்கள். 5, 6

பிரதிவாதிகளுக்கு எதிராக நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. தேவையற்று பிரதிவாதிகளை சேர்த்து அலைகழிவு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு 5, 6 பிரதிவாதிகளுக்கு எதிராக தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)